**ஜூலை – 24**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் வாய்ப்புகளைப் புதுப்பிக்கும் விதமாக, கால்நடைத் துறை அமைச்சரான உடுமலை K. இராதாகிருஷ்ணனை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவராக நியமித்துள்ளது.
- ஜூலை 04 முதல் ஜூலை 07 வரை 2019 ஆம் ஆண்டின் உலகக் குழந்தைகளின் வெற்றியாளர் போட்டிகள் மாஸ்கோவில் நடத்தபட்டன.
    - இது புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து மீண்ட குழந்தைகளுக்காக நடத்தப்பட்டது.
- ஐக்கிய இராஜ்ஜியத்தின் செல்வமிக்க விர்ஜின் கேலடிக் நிறுவனம் தனது முதலாவது பரிசோதனை விண்கலனை மாற்றியமைக்கப்பட்ட போயிங் 747 விமானத்திலிருந்து ஏவியுள்ளது.
    - இது விண்வெளிக்கு வணிக ரீதியிலான சுற்றுலாவிற்குத் தயாராவதற்காக ரிச்சர்ட் ப்ரான்சனின் விண்வெளி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சோதனைகளின் ஒரு பகுதியாகும்.
- ஐக்கிய இராஜ்ஜியத்தின் அடுத்தப் பிரதமராக போரிஸ் ஜான்சன் பதவி ஏற்கவிருக்கின்றார். இவருக்கு முன்பு தெரஸா மே ஐக்கிய இராஜ்ஜியத்தின் பிரதமராக இருந்தார். போரிஸ் ஜான்சன் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்தவர் ஆவார்.
- அயோத்தியாவில் பாயும் சரயு நதிக் கரையில் 251 மீட்டர் உயரம் கொண்ட இராமர் சிலையை அமைக்க உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் முடிவு செய்துள்ளார்.
    - இந்தச் சிலை அமைக்கப்பட்டால் குஜராத்தில் உள்ள ஒற்றுமைக்கான சிலையை விட இது உயரமானதாக இருக்கும். மேலும் இது உலகின் மிக உயரிய சிலையாகவும் விளங்கும்.
- இராணுவத்தின் கிழக்குப் பிராந்தியத் தளபதியான லெப்டினன்ட் முகுந்த் நாராவானே இந்திய இராணுவத்தின் அடுத்த துணைத் தலைமைத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று ஓய்வு பெறவிருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் டி அன்பு என்பவருக்குப் பின்பு இவர் அப்பதவியை ஏற்கவிருக்கின்றார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் தகவலின் படி, நாட்டில் மிக அதிகமான ஏடிஎம் மோசடி வழக்குகள் மகாராஷ்டிராவில் (233) பதிவாகியுள்ளன. இதற்கு அடுத்து தில்லி (179) மற்றும் தமிழ்நாடு (147) ஆகிய மாநிலங்களில் அதிகமான வழக்குகள் பதிவாகியுள்ளன.

# தேசியச் செய்திகள்

## கையூட்டுச் செய்திகள்

- கையூட்டுச் செய்திகளின் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சமீபத்தில் அறிவித்துள்ளது.

- கையூட்டுச் செய்திகள் என்பது பணம் அல்லது பிற உதவிகளைப் பெற்றுக் கொண்டு அச்சு அல்லது மின்னணு ஊடகங்களில் ஒளிபரப்பப் படும் எந்தவொரு செய்தி அல்லது ஆய்வு என வரையறுக்கப் படுகின்றது.
- இந்தியப் பத்திரிக்கை மன்றம் 2018-19 ஆம் ஆண்டின் போது தேர்தல் ஆணையம் மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து கையூட்டுச் செய்திகள் குறித்த 58 புகார்களைப் பெற்றுள்ளது.
- இது கையூட்டுச் செய்தியைத் தண்டனைக்குரிய ஒழுங்கீனச் செயலாக ஏற்படுத்தும் நோக்கில் 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தைத் திருத்தப் பரிந்துரைத்துள்ளது.

## குண்டு துளைக்காத கவச ஆடை – கவாச்

- புது தில்லியில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் சர்வதேசக் காவல் துறை கண்காட்சியின் போது இந்தியாவின் எடை குறைவான (மெல்லிய) குண்டு துளைக்காத கவச ஆடையான பாபா கவாச் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது தளவாடத் தொழிற்சாலைகள் வாரியம் மற்றும் பொதுத் துறை உலோகம் & உலோகக் கலவை உற்பத்தியாளரான மிதானி ஆகியவற்றால் கூட்டாக இணைந்து மேம்படுத்தப்பட்டது.
- இந்தக் கவச ஆடை மத்திய உள்துறை அமைச்சகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட எடையைக் காட்டிலும் அரை கிலோ குறைவாக, 9.2 கிலோ கிராமைக் கொண்டுள்ளது.
- இந்தக் கவச ஆடையானது பாபா அணு ஆராய்ச்சி மையத்திலிருந்துப் பெறப்பட்ட நானோ தொழில்நுட்பத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இது 5 ஆண்டு கால உத்திரவாதத்தைக் கொண்டுள்ளது.




## பென்சில் தளம்

- பென்சில் தளமானது (குழந்தைத் தொழிலாளர்களற்ற நிலைக்கான திறனுள்ள அமலாக்கத் தளம்/ Platform for Effective Enforcement for No Child Labour – PENCIL) இந்தியா முழுவதும் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த 361 புகார்களைத் தீர்ப்பதில் திறம்படி செயல்படுகின்றது.
- இது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது குழந்தைத் தொழிலாளர் சட்டத்தின் விதிகளை திறம்படச் செயல்படுத்துவதை

உறுதி செய்வதையும் தேசியக் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- எந்தவொரு நபரும் குழந்தைத் தொழிலாளர் குறித்த ஆன்லைன் (நிகழ்நேர) புகார்களை பென்சில் தளத்தில் பதிவு செய்யலாம்.

## புதிய ஆளுநர்கள் - நியமனங்கள்

- பின்வரும் மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| குஜராத் | ஆச்சார்யா தேவ்ராத் |
| இமாச்சலப் பிரதேசம் | கல்ராஜ் மிஸ்ரா |
| சத்தீஸ்கர் | அனுசுயா உய்கே |
| ஆந்திரப் பிரதேசம் | பிஸ்வா பூசன் ஹரிசந்தன் |

## பிராந்திய இணைப்பிற்கான உடான் திட்டம்

| Departure Airport (State) | Arrival Airport (State) | OPERATOR | Commencement Date |
|---|---|---|---|
| MYSORE (Karnataka) | HYDERABAD (Telangana) | ALLIANCE AIR | 19 July 2019 |
| HYDERABAD (Telangana) | MYSORE (Karnataka) | ALLIANCE AIR | 19 July 2019 |
| MYSORE (Karnataka) | GOA | ALLIANCE AIR | 19 July 2019 |
| GOA | MYSORE (Karnataka) | ALLIANCE AIR | 19 July 2019 |
| MYSORE (Karnataka) | COCHIN (Kerala) | ALLIANCE AIR | 19 July 2019 |
| COCHIN (Kerala) | MYSORE (Karnataka) | ALLIANCE AIR | 19 July 2019 |
| *KOLKATA (West Bengal)* | *SHILLONG (Meghalaya)* | *IndiGo(DoNER Route)* | *20 July 2019* |
| *SHILLONG (Meghalaya)* | *KOLKATA (West Bengal)* | *IndiGo(DoNER Route)* | *20 July 2019* |

- உடான் என்ற பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 8 வழிகள் செயல்படத் தொடங்கியுள்ளன.
- இத்திட்டம் பிராந்தியத்திற்கிடையே விமான வழியான இணைப்பை அதிகரிக்க முயல்கின்றது. இது விமான நிறுவனங்களுக்கு பல்வேறுச் சலுகைகளை அளிக்கின்றது.
- தற்பொழுது செயல்பாட்டில் உள்ள மொத்த உடான் திட்ட வழிகளின் எண்ணிக்கையானது 194 ஆக அதிகரித்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று உடான் திட்டம் தொடங்கப்பட்டது.

## உஜ் பாலம் மற்றும் பசந்தர் பாலம்

- ஜம்மு காஷ்மீரில் உள்ள 2 புதிய பாலங்களை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
    - கத்துவா மாவட்டத்தில் உள்ள 1 கிலோ மீட்டர் நீளம் கொண்ட உஜ் பாலம்

  - சம்பா மாவட்டத்தில் உள்ள 617.40 மீட்டர் நீளம் கொண்ட பசந்தர் பாலம்
- இந்த இரண்டு பாலங்களும் சம்பார்க் திட்டத்தின் கீழ், எல்லைச் சாலைகள் அமைப்பினால் (BRO - Border Roads Organisation) கட்டப்பட்டன.
- 1000 மீட்டர் நீளம் கொண்ட உஜ் பாலமானது BROவினால் கட்டப்பட்ட மிக நீளமான பாலமாகும்.

*இதுபற்றி*

- BRO ஆனது இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் உள்ள தொலைதூரப் பகுதிகளை மேம்படுத்துவதற்காகவும் 1960 ஆம் ஆண்டு மே 07 அன்று ஏற்படுத்தப்பட்டது.
- இந்த அமைப்பு பின்வரும் இடங்களில் செயல்படுகின்றது.
  - 21 மாநிலங்கள், 1 ஒன்றியப் பிரதேசம் (அந்தமான் நிக்கோபர் தீவுகள்)
  - ஆப்கானிஸ்தான், பூடான், மியான்மர், இலங்கை போன்ற அண்டை நாடுகள்.

# சர்வதேசச் செய்திகள்

## அணி சேரா இயக்கத்தின் சந்திப்பு

- அணி சேரா இயக்கத்தின் (Non-Aligned Movement - NAM) ஒருங்கிணைப்பு மன்றத்தின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பானது வெனிசுலாவில் உள்ள காராகஸில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டுச் சந்திப்பின் கருத்துரு, "சர்வதேசச் சட்டத்திற்கு மதிப்பளிப்பதன் மூலம் அமைதியை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்" என்பதாகும்.
- 2016 ஆம் ஆண்டு முதல் NAM அமைப்பின் தலைவராக வெனிசுலா இருந்து வருகின்றது. தற்பொழுது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் NAM அமைப்பின் தலைவர் பதவி அஸர்பைஜானுக்குச் செல்லவிருக்கின்றது.

*இதுபற்றி*

- NAM அமைப்பு 1961 ஆம் ஆண்டு பெல்கிரேடில் ஏற்படுத்தப்பட்டது.
- இது இந்தியாவின் முன்னாள் பிரதமரான ஜவஹர்லால் நேரு மற்றும் யூகோஸ்லேவியாவின் அதிபரான ஜோசிப் ப்ரோஸ் டிட்டோ ஆகியோரின் கூட்டு முயற்சியாகும்.
- இது ஐக்கிய நாடுகளுக்குப் பிறகு 120 உறுப்பு நாடுகளைக் கொண்ட 2-வது மிகப் பெரிய சர்வதேச அமைப்பாகும்.
- இது அமெரிக்கா மற்றும் சோவியத் இரஷ்யா ஆகிய நாடுகளினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டிணைவின் ஒரு பகுதியாக இல்லாமல் வளரும் நாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு முதன்மை அமைப்பாகும்.

# மாநிலச் செய்திகள்

## தனியார் நிறுவனங்களில் உள்ளூரைச் (சொந்த மாநிலம்) சேர்ந்தவர்களுக்கான இட ஒதுக்கீடு

- அனைத்துத் தனியார் தொழிற்துறை நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலும் உள்ளூரைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டைச் செயல்படுத்திய முதல் மாநிலம் ஆந்திரப் பிரதேசம் ஆகும்.
- அரசிடமிருந்து நிதியுதவி பெறும் அல்லது பிற உதவிகள் பெறும் நிறுவனங்கள் என்ற பாகுபாடில்லாமல் அனைத்து நிறுவனங்களும் இந்த விதிமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.
- அரசு – தனியார் பங்களிப்பில் உள்ள தொழிற்துறைப் பிரிவுகள், தொழிற்சாலைகள், கூட்டு முயற்சிகள் மற்றும் திட்டங்களின் அனைத்து வகையிலும் உள்ள 75% தனியார் வேலைகள் ஆந்திரப் பிரதேச மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

## ஒடிசாவில் கரியால் முதலைகள் பாதுகாப்பு

- உயர் அச்சுறுத்தல் நிலையில் உள்ள “கரியால்” (gharials) முதலை இனங்களின் எண்ணிக்கையை, அதன் இயற்கை வாழிடங்களில் அதிகப்படுத்துவதற்கான தனது முயற்சியை ஒடிசா அரசு புதுப்பித்துள்ளது.



- இது கதிர்வழி அலைசெலுத்துக் கருவி பொருத்தப்பட்ட 5 முதலைகளை மகாநதியின் சத்கோசி பள்ளத்தாக்கிற்குள் விடுவித்துள்ளது.
- கடல் முதலைகள் மற்றும் மற்ற முதலைகளுடன் ஒப்பிடும்போது, கரியால் முதலை மிக நீண்ட மற்றும் குறுகிய முன்மூக்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் மூன்று வகை முதலை இனங்கள் காணப்படுகின்றன. அவையாவன
    - கரியால் (ஆற்று நீர் முதலை)
    - உவர்நீர் முதலை
    - சதுப்பு நில முதலை
- இந்த மூன்று முதலை இனங்களையும் கொண்டுள்ள ஒரே இந்திய மாநிலம் ஒடிசா ஆகும்.

## கர்நாடகாவில் நம்பிக்கை வாக்கெடுப்பு – தோல்வி

- கர்நாடகாவின் விதான் சபாவில் (சட்டப் பேரவை) காங்கிரஸ் - ஜனதா தளம் ஆகிய கூட்டணிக் கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பு 6 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.
- 225 சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் ஓட்டெடுப்பின் போது கலந்து கொள்ளவில்லை.
- கலந்து கொள்ளாத சட்டமன்ற உறுப்பினர்கள் - 15 உறுப்பினர்கள் தங்களது உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளனர். 5 உறுப்பினர்கள் ஓட்டெடுப்பைத் தவிர்த்திருந்தனர்.
- 99 சட்டமன்ற உறுப்பினர்கள் அரசிற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், 105 சட்டமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கைத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர்.
- S. நிஜலிங்கப்பா (1962-68), D. தேவராஜா உர்ஸ் (1972-77) மற்றும் சித்தராமையா (2013-18) ஆகியோர் மட்டுமே கர்நாடக வரலாற்றில் தங்களது முழு பதவிக் காலத்தையும் நிறைவு செய்த முதல்வர்கள் ஆவர்.

*குறிப்பு*

- நம்பிக்கை வாக்குத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமோ அல்லது எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அரசின் நம்பிக்கையை நிரூபிக்குமாறு கோரினாலோ சட்ட சபையில் அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

# விளையாட்டுச் செய்திகள்

## PT உஷாவிற்கு “முதுபெரும் பட்டம்”

- புகழ்பெற்ற தடகள வீராங்கனையான PT உஷா சர்வதேசத் தடகள கூட்டமைப்பு மன்றத்தின் (International Association of Athletics Federation’s - IAAF) முதுபெரும் பட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.



- தடகளப் போட்டிகளுக்கு இவருடைய நீண்ட கால மற்றும் திறன்மிக்க சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்தக் கௌரவிப்பு நிகழ்ந்துள்ளது.

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கத்தாரில் நடைபெறவிருக்கும் 52-வது IAAF கூட்டத்தில் இவருக்கு அவ்விருது வழங்கப்படவிருக்கின்றது.
- இவர் பெரும்பாலும் “இந்தியத் தடகளத்தின் அரசி” என்று போற்றப் படுகின்றார்.
- 1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் உஷாவின் திறமைமிக்க செயல்பாடு வெளிப்பட்டது.
- 400 மீட்டர் தடை ஓட்டத்தில் இறுதி ஆட்டம் வரை சென்ற முதல் இந்திய வீராங்கனை இவராவார். ஆனால் இவர் வெண்கலப் பதக்கத்தை இழந்தார்.

- - - - - - - - - - - - - - -